# நீரின்றி அமையாது உலகு

## சிறுவினா

1. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

ஐம்பூதங்களுள் ஒன்று நீர். அது நிலம், காற்று, நெருப்பு, வானம் ஆகிய நான்குடன் தொடர்பு கொண்டு இயங்கவல்லது. நம் முன்னோர் கிடைத்த நீரை அளவோடு பயன்படுத்தினர்.

அதனால் நாமும், நீரை அளவோடு பயன்படுத்தி, வரும் தலைமுறைக்குப் பாதுகாத்து வைக்க வேண்டும். குளம் தொட்டு வளம் பெருக்கி, வாழ்ந்தவர்கள் தமிழர். இன்றும் நீர்நிலைகளைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டும்.

மழை நீரைப் பயன்படுத்தும் முறை அறிய வேண்டும். இளம் தலைமுறையினருக்கு நீர் மேலாண்மை பயிற்சி வழங்க வேண்டும்.

2. சோழர்காலக் குமிழித்தூம்பு குறித்து எழுதுக.

சோழர்காலக் குமிழித்தூம்பு :

- மழைக் காலங்களில் ஏரி நிரம்பும்போது நீந்துவதில் வல்லவரான ஒருவர் தண்ணீருக்குள் சென்று கழிமுகத்தை அடைந்து குமிழித்தூம்பை மேலே தூக்குவர்.
- அடியில் இரண்டு துளைகள் காணப்படும். மேலே இருக்கும் நீரோடித் துளையிலிருந்து நீர் வெளியேறும். கீழே உள்ள சேறோடித் துளையிலிருந்து நீர் சுழன்று சேற்றுடன் வெளியேறும் இதனால் தூர்வார வேண்டிய அவசியம் இல்லை.

3. கல்லணை சிறுகுறிப்புத் தருக.

- கல்லணை நீளம் 1080 அடியாகவும், அகலம் 40 முதல் 60 அடியாகவும், உயரம் 15, 18 அடியாகவும் இருக்கிறது.
- காவிரி ஆற்றின் மீது பெரிய பாறைகளைக் கொண்டு வந்து போட்டனர். அந்தப் பாறைகளும் நீர் அரிப்பின் காரணமாகக் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் சென்றன. அதுமேல் வேறொரு பாறையை வைத்து நடுவே தண்ணீரில் கரையாத

ஒருவித ஒட்டும் களி மண்ணைப் புதிய பாறைகளில் பூசி இரண்டையும் ஒட்டிக் கொள்ளும் விதமாகச் செய்தனர். இதுவே கல்லணையைக் கட்டப் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பமாகக் கருதப்படுகிறது.

4. ஜான் பென்னி குவிக் - குறிப்பு வரைக.

- தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகியவற்றின் விவசாயத்திற்கும், குடிநீருக்கும் உதவும் முல்லைப் பெரியாறு அணையை 1895 ஆம் ஆண்டு கட்டியவர் ஜான் பென்னி குவிக். அவரை "பஞ்சம் போக்கிய பரமனாக" அப்பகுதி மக்கள் வழிபடுகின்றனர்.
  அவருக்கு நன்றி செலுத்தும் விதமாக தம் குழந்தைகளுக்குப் பென்னி குவிக் பெயர் சூட்டி இன்றும் நினைந்து, நினைந்து போற்றுகின்றனர்.

5. தமிழகத்தின் நீர்நிலைகளின் பெயர்கள் ஏதேனும் 15 - ம், அதன் விளக்கமும் தருக.